Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (31 - 12 - 1990) திங்கட்கிழமை ஓசை 306

## பாடசாலை உபகரணங்கள் பெருமளவில் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் வெண்கட்டிகளில் இருந்து அதிபர், தளபாடம் வரைக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலைமையை சரிசெய்வதற்கு நான் கொழும்பு செல்லவேண்டியதாக உள்ளது. இந்த விடயம் பற்றி கொழும்புடன் தொடர்பு கொண்டும், மூப்படைத்தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டும் எதுவித பதிலும் இன்னும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சுற்றிவளைப்பிற்கு உள்ளாகியுள்ள

# படுவான்கரைக்கு உணவு, மருந்து கொண்டு செல்லத் தடை

### மக்கள் பெரும் அவதி; இராணுவம் வீடுகளில் கொள்ளை

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்கு உள்ளாகியுள்ள படுவான் கரைப்பகுதி அகதிகளுக்கு மருந்துப் பொருள்களோ உணவுப் பொருள்களோ கொண்டு செல்ல இராணுவம் தடைவிதித்துள்ள அதேவேளை அங்கிருந்து மக்கள் வெளியேறவும் தடைவிதித்துள்ளது. மேலும் தேடுதல் என்ற போர்வையில் வீடுகளில் இராணுவத்தினர் கொள்ளையிலும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த இருபதாம் திகதியில் இருந்து கோயில் போரதீவு, பெரிய போரதீவு, முனைத்தீவு போன்ற பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தேடுதல் நடவடிக்கை காரணமாக, அப்பகுதி மக்கள் கோவில் போரதீவு சித்திர வேலாயுத சுவாமி கோவில், பெரிய போரதீவு காளிகோயில், முனைத்தீவு பிள்ளையார் கோயில் ஆகிய கோயில்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இம் மக்களுக்கு உணவு, மருந்துப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கும், வேறு இடங்களுக்குச் செல்வதற்கும் இராணுவத்தினர் தடை விதித்துள்ளதால் இவர்கள் சொல்லொண்ணாத் (4 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுடன் யுத்த நிறுத்தமோ பேச்சுவார்த்தையோ இல்லை - ரஞ்சன்

(லண்டன்)

**சமாதானமும் இல்லை; யுத்த நிறுத்தமுமில்லை என்று**

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்ததாக நேற்றிரவு பி.பி.ஸி தெரிவித்தது. புலிகளின் யுத்த நிறுத்தப் பிரகடனமானது புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள மேற்கொண்ட ஒரு தந்திரோபாயமாகும் என்று ஒரு சிரேஷ்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

### விமானக்கடத்தற்காரர் கைது

(அல்ஜீரியர்ஸ்)

அல்ஜீரியாவில் நேற்று முன் தினம் கடத்தப்பட்ட விமானத்தைக் கடத்தியவர்கள் கைது (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யுத்த நிறுத்தத்தை பரிசீலிப்பதாக பிரட்மன் அறிவிப்பு

(டில்லி)

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் அமைப்பு அறிவித்த யுத்த நிறுத்தப் பிரகடனத்தைப் பரிசீலனை செய்து வருவதாகவும், அரசாங்கத்தின் முடிவு விரைவில் தெரிவிக்கப்படும் என்றுஜனாதிபதி பிரேமதாசாவின் அரசியல் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆதாரம் காட்டி அகில இந்திய வானொலி நேற்றுமாலை தெரிவித்திருந்தது. இவ்வாண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி ஏற்பட்ட மோதலின் பின் விடுதலைப்புலிகள் டிசம்பர் 31 ஆம் திகதி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளப் போவதாக வெளியிட்ட பிரகடனம் கொழும்புச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் மூலம் அரசாங்கத்துக்குக் கையளிக்கப் பட்டதாக அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது.

### மட்டக்களப்பில் 12 தமிழ்ப் பெண்கள் இராணுவத்தால் மானபங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் தாய், மகள் உட்பட பன்னிரண்டு தமிழ்ப்பெண்கள் கொடூரமான முறையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்புமாவட்டத்தில்மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைக்காக அறிவிக்கப் பட்டுள்ள ஊரடங்கு வேளையிலேயே இச்சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.

மட்டக்களப்புமாவட்டத்தில் உள்ள காக்காச்சிவெட்டை என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நான்கு தமி (4 ஆம் பக்கம் பார்க்க)

### மாங்குளம் மக்கள் வங்கி அடுத்த மாதம் துணுக்காயில்

மாங்குளம் மக்கள் வங்கிக் கிளை அடுத்தமாதம் துணுக்காயில் இயங்கவுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த இந்த வங்கிக்கிளை மாங்குளத்தில் ஆரம்பிக்க இடவசதியில்லாததால் துணுக்காயில் இரா.பிய வங்கி கட்டடத்தில் செயற்பட உள்ளது.

இந்தக்கிளையில் இருந்த ஆவணங்கள், தளபாடங்கள் கடந்தகால யுத்தத்தின்போது காணாமற்போயுள்ளன. 82)

### "கலை, கலாசார ரீதியாக வளர்ச்சியடைந்துவிட்டோம்" - ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

கலை, கலாசார ரீதியாக நாம் வளர்ச்சியடைந்துவிட்டோம் என்பதையே இந்த [illegible]

புகளையே முன்னர் காணக் கூடியதாக இருந்தது. [illegible]

### 300 கலைஞர்கள் கலந்த [illegible] கலந்துரையாடல்

### அனலை, எழுவைதீவு மக்களுக்கு உலர் உணவு அட்டை விநியோகம்

அனலைதீவு, எழுவைதீவு [illegible] உலர் உணவு அட்டை [illegible]

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்கு உள்ளாகியுள்ள படுவான்கரைப்பகுதி அகதிகளுக்கு மருந்துப் பொருள்களோ உணவுப் பொருள்களோ கொண்டு செல்ல இராணுவம் தடைவிதித்துள்ள அதேவேளை அங்கிருந்து மக்கள் வெளியேறவும் தடைவிதித்துள்ளது. மேலும் தேடுதல் என்ற போர்வையில் வீடுகளில் இராணுவத்தினர் கொள்ளையிலும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த இருபதாம் திகதியில் இருந்து கோயில் போரதீவு, பெரிய போரதீவு, முனைத்தீவு போன்ற பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தேடுதல் நடவடிக்கை காரணமாக, அப்பகுதி மக்கள் கோவில் போரதீவு சித்திர வேலாயுத சுவாமி கோவில், பெரிய போரதீவு காளிகோயில், முனைத்தீவு பிள்ளையார் கோயில் ஆகிய கோயில்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இம் மக்களுக்கு உணவு, மருந்துப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கும், வேறு இடங்களுக்குச் செல்வதற்கும் இராணுவத்தினர் தடை விதித்துள்ளதால் இவர்கள் சொல்லொண்ணாத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

(அல்ஜீரியர்ஸ்)

அல்ஜீரியாவில் நேற்று முன்தினம் கடத்தப்பட்ட விமானத்தைக் கடத்தியவர்கள் கைது

(4ஆம் பக்கம் பார்க்க)

களின் யுத்த நிறுத்தப் பிரகடனமானது புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள மேற்கொண்ட ஒரு தந்திரோபாயமாகும் என்று ஒரு சிரேஷ்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் யுத்த நிறுத்தத்தை பரிசீலிப்பதாக பிரட்மன் அறிவிப்பு

(டில்லி)

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் அமைப்பு அறிவித்த யுத்த நிறுத்தப் பிரகடனத்தைப் பரிசீலனை செய்து வருவதாகவும், அரசாங்கத்தின் முடிவு விரைவில் தெரிவிக்கப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசியல் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனை ஆதாரம் காட்டி அகில இந்திய வானொலி நேற்று மாலை தெரிவித்திருந்தது. இவ்வாண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி ஏற்பட்ட மோதலின் பின் விடுதலைப்புலிகள் டிசம்பர் 31 ஆம் திகதி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளப் போவதாக வெளியிட்ட பிரகடனம் கொழும்புச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் மூலம் அரசாங்கத்துக்குக் கையளிக்கப்பட்டதாக அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது.

# மட்டக்களப்பில் 12 தமிழ்ப் பெண்கள் இராணுவத்தால் மானபங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் தாய், மகள் உட்பட பன்னிரண்டு தமிழ்ப்பெண்கள் கொடூரமான முறையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்புமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைக்காக அறிவிக்கப்பட்டுள்ள ஊரடங்கு வேளையிலேயே இச்சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.

மட்டக்களப்புமாவட்டத்தில் உள்ள காக்காச்சிவெட்டை என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நான்கு தமி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மாங்குளம் மக்கள் வங்கி அடுத்த மாதம் துணுக்காயில்

மாங்குளம் மக்கள் வங்கிக் கிளை அடுத்தமாதம் துணுக்காயில் இயங்கவுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த இந்த வங்கிக்கிளை மாங்குளத்தில் ஆரம்பிக்க இடவசதியில்லாததால் துணுக்காயில் கிராமிய வங்கிக் கட்டடத்தில் செயற்பட உள்ளது.

இந்தக்கிளையில் இருந்த ஆவணங்கள், தளபாடங்கள் கடந்தகால யுத்தத்தின்போது காணாமற்போயுள்ளன. (82)

# "கலை, கலாசார ரீதியாக வளர்ச்சியடைந்துவிட்டோம்"

(யாழ்ப்பாணம்)

\- ஆஞ்சநேயர்

கலை, கலாசார ரீதியாக நாம் வளர்ச்சியடைந்துவிட்டோம் என்பதையே இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் புலப்படுத்துகின்றன. கசிப்புக் கடைகளையும் மினிசினிமாக்களையும் தேடிச்சென்ற நிகழ்வுகளை முன்னர் காணக் கூடியதாக இருந்தது. போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கின் காரணமாக "இந்தமண் எங்களின்சொந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

# 300 கலைஞர்கள் கலந்த நேற்றைய கலந்துரையாடல்

(நல்லூர்)

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நேற்றுக் காலை பத்து மணியளவில் கலைஞர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்றது. கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவுப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அனலைதீவு, எழுவைதீவு மக்களுக்கு உலர் உணவு அட்டை விநியோகம்

அனலைதீவு, எழுவைதீவு மக்களுக்கான உலர் உணவு அட்டைகள் தற்போது ஊர்காவற்றுறையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த உலர் உணவு அட்டைகள் வழங்கப்படாதிருந்தது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் எஸ் சிவரத்தினம் அவர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக இவை தற்போது வழங்கப்பட்டுள்ளது. (15)

# கோண்டாவில் பஸ்டிப்போ மீது நேற்று விமானக் குண்டு வீச்சு

(கோண்டாவில்)

சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலினால் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் டிப்போ பலத்த சேதமடைந்துள்ளது.

நேற்று மாலை 5 மணியளவில் கோண்டாவில் பகுதியை வட்டமிட்ட மூன்று பொம்மர் விமானங்கள் கோண்டாவில் பஸ் டிப்போவின் மீது ஆறு குண்டுகளை வீசித்தள்ளின. இதனால் அங்கு தரித்து நின்ற 50 ற்கும் மேற்பட்ட பேருந்துகளில் ஒன்று முற்றாகச் சிதறிக் காணப்படுவதுடன் 25 க்கும் மேற்பட்ட பேருந்துகள் பலத்த சேதமடைந்துள்ளன.

மேலும் அலுவலகக் கட்டடம், களஞ்சியப்பகுதி, சேவிஷ்ஸ்ரேசன், ரீஜனல் ஸ்ரோர்ஸ், விநியோகபகுதி ஆகியன பலத்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுத்துவக்கால் காலில் காயம்

காட்டுக்குச் சென்றவர் கட்டுத்துவக்கு வெடியில் அகப்பட்டு கால்களில் கடும்காயங்களுக்கு உள்ளானார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# இறைச்சிக்கடை முதலாளியிடம் 20,000 ரூபா வழிப்பறி

(யாழ்ப்பாணம்)

வியாபாரம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவரை இடைமறித்துத் தாக்கி இருபதினாயிரம் ரூபா பணத்தை பறித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர் கொள்ளையர்.

நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமத்தில் இறைச்சிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியில் ஹெலிதாக்கு இருவர் காயம்

(நல்லூர்)

நீர்வேலி கரந்தன் சந்தியில் நேற்று மூற்பகல் 11-30 மணியளவில் ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதல் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டது. சந்தியில் நின்ற மக்கள் நாலா பக்கமும் பாதுகாப்பை நோக்கிச் சிதறியோடிய போதிலும், மு. இராசேந்திரம் (வயது 18), ப. குமார் (வயது 15) ஆகியோர் காயங்களுக்கு உள்ளானார்கள் இவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (85)

# சிறியோர்மீது தாக்கு; பெரியோருக்கு ஏச்சு!

(சங்கானை)

வைத்தியசாலையில் சிகிச்சை பெறச்சென்ற நோயாளிகள் சிலரை அங்குகடமையிலிருந்த மருத்துவத்தாதிஒருவர் தகாத வார்த்தைகளால் ஏசித் தாக்கியுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெண்கட்டி தயாரிக்கும் முயற்சி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள உள்ளூர் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி வெண்கட்டி தயாரிக்கும் முயற்சியில் முறைசாராக் கல்விப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள் வெற்றிகண்டுள்ளனர்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கட்புல சாதனங்கள் திருத்தும் பயிற்சி நெறி பயிலும் மாணவர்கள் மேற்படி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்

இந்த வெண்கட்டி தயாரிப்பதற்கு குடாநாட்டில் தாரா

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிரமதானம்

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போதனா வைத்தியசாலைக்குச்சென்று அங்கு சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சினால் சிதைந்திருந்த கட்டடப்பகுதிகளைச் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்தனர்.

# யாழ்மாவட்டத்தில் கால்நடை உணவு, மருந்து தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் - மாவட்டத்தில் தற்போது குடிமக்களுக்கு மட்டுமல்ல கால்நடைகளுக்கும் உணவு மற்றும் மருந்துப் பொருள்களின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கால்நடை உணவுப் பொருள்களின் விலை உயர்வு, மருந்துப் பொருள்கள் முற்றாக முடிவடைந்த நிலை ஆகியவற்றால் கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்படுகின்றன. சிலவற்றை கட்டுப்படுத்த முடியாத நிலையில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் இதுவரை இறந்துள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## 125 லட்சம் ரூபா கஞ்சா கடத்தல்

(கொழும்பு)

நீர்கொழும்பில் 1 கோடி 25 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. 81 சாக்குகளில் 5000 கிலோ நிறையுள்ள கஞ்சாவைக் கடத்திய மூன்று நபர்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிய விளையாட்டு

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்தப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

**லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்**

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புது வருட பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (B 1658)

---

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன்உறை, பித்தளை, செம்பு, போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம் (B- 1761)

---

**விற்பனைக்கு**

சொந்தப் பாவனையிலுள்ள சொப்பர் (Chopper) சைக்கிள் ஒன்றும், பாவித்த கைக்கடிகாரங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: மா. சிலுவைராசா, 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (R/ 986)

---

The Jaffna Education Centre யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L, A/L. Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு. (B. 1657)

---

**கோழி இறைச்சி**

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு கோழி இறைச்சி விற்கப்படும். நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர். (R-964)

---

**காணவில்லை**

மட்டுவிலைச் சேர்ந்த தியாகராசா சந்தையா என்பவர் 14-12-90 வெள்ளிக்கிழமை காரைநகர் சென்றவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை. அவரைப் பற்றிய தகவல் தருவோர் தயவு செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அறியத் தரவும். திருமதி சந்தையா மட்டுவில் வடக்கு ஆயம் சாவகச்சேரி. (R-988)

---

**தேவை**

நோயாளிகளை பராமரிப்பதற்கு ஓய்வு பெற்ற தாதிமார்உடன்

---

# ராஜா காமென்ற்ஸ்

★ ராஜா காமென்ற்ஸ் ஸ்தாபனத்தாரின் நம்பிக்கை, திறன்கூடிய தரமான றெடிமேற் ஆடைத் தினுசுகள் இன்றைய நவநாகரிக முறைகளில்

ஆடவர் · நங்கையர் · மழலைகள்

★ அனைவரினதும தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு)

விபரங்களுக்கு :-

**யோகாஸ் புடைவை மாளிகை**

இல. 16, பெரியகடை.

**குமார் புடைவை மாளிகை**

முத்திரைச்சந்தி, நல்லூர்.

(B-1785)


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சி. நடராசா**

மலர்வு: 09 - 03 - 1939 உதிர்வு: 31 - 12 - 1989

திதி: 8 - 01 - 1991

எங்கள் ஆருயிர் அப்பாவே தங்களை நாங்கள் விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு முடிவுற்றாலும் தங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும். தங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்

மானிப்பாய் வீதி,
செபஸ்தியார் லேன்,
ஒட்டுமடம். (B-1785)

# ஏழைக் குழந்தைகளுக்கு இலவச பால்மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆனி மாதம் தொடக்கம் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளின் காரணமாகப் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களில் இரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் பால்மா வகைகளை வழங்கி வருகின்றார்கள்.

இதுவரை இப்பால்மா வகைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் மேற்படி சபைத் தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரை, தம்பிகுமாரர் வீதி, சுன்னாகத்திலுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


**தாவரவியல் - திரு. செல்வநேசன்**

★ (மிகவிரிவான, விளக்கமான கற்பித்தலுக்கு)

A/L - 92 ★ குழியவியல் ★ உருவவியல்

A/L - 91 ★ தாவர இராட்சியப் பிரிவு ★ உடற்றொழிலியல்

A/L - 90 ★ சூழலியல் ★ இடமுறையியல் வினாவிடை

விபரங்களுக்கு:

**New Master Institute**

B. M. C. Lane, JAFFNA

(B. 1782)

---

**கணிதப் பிரிவு மாணவர்களுக்கு**

A/L 90, 91, 92.

❋ திரு. நல்லையா

❋ திரு. கிருஷ்ணா

ஆகிய தரமான ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

(ஒவ்வொரு பிரிவிற்கும் மாதத்திற்கு 35 மணித்தியாலத்திற்குக் குறையாத வகுப்புக்கள்)

மேலதிக விபரங்களுக்கு:

**New Master Institute**

B. M. C. Lane, JAFFNA.

(B/1783)

---

**BECON** ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தகம்**

**A/L 92**

ஆரம்பம்: 06-01-1991

ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி

❋ பொருளியல் - வரதராஜன்

❋ அளவையியல் - S. S. மனோகரன்

❋ வர்த்தகம் - பிரபல விரிவுரையாளர்

❋ கணக்கியல் - மரியதாஸ்

பாணம் (R/ 986)

The Jaffna Education Centre
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L, A/L, Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு.

(B. 1657)

கோழி இறைச்சி

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு கோழி இறைச்சி விற்கப்படும். நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர். (R-964)

காணவில்லை

மட்டுவிலைச் சேர்ந்த தியாகராசா சுந்தையா என்பவர் 14-12-90 வெள்ளிக்கிழமை காரைநகர் சென்றவர் இன்று வரை வீடு திரும்பவில்லை. அவரைப் பற்றிய தகவல் தருவோர் தயவு செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அறியத் தரவும். திருமதி சுந்தையா மட்டுவில் வடக்கு ஆயம் சாவகச்சேரி,

(R-988)

தேவை


நோயாளிகளை பராமரிப்பதற்கு ஓய்வு பெற்ற தாதிமார் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: விஸ்பரஜீஸ், 108, C/O ஈழநாதம் 31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (B/ 1792)

## விழிப்புக்குழுக்கள் அமைக்க நடவடிக்கை

சிற்றூரவைகள் தோறும் விழிப்புக்குழுக்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருட்டு, கசிப்பு உற்பத்தி, விற்பனை போன்ற சமூக விரோத செயல்கள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து விழிப்புக் குழுக்களை மீண்டும் அமைப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதேசப் பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். விழிப்புக் குழுக்களில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களே இருத்தல்வேண்டும் என்றும் இவர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபடாதவர்களாக இருத்தல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ. த. மை.)



## அமரர் சி. நடராசா

மலர்வு: 09 - 03 - 1939. உதிர்வு: 31 - 12 - 1989
திதி: 8 - 01 - 1991

எங்கள் ஆருயிர் அப்பாவே தங்களை நாங்கள் விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு முடிவுற்றாலும் தங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும். தங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்

மானிப்பாய் வீதி,
செபஸ்தியார் லேன்,
ஓட்டுமடம்.

(B-1785)

யாழ்-பல்கலைக்கழகம்
விவசாயபீடம்
விலங்கு வேளாண்மைத் துறைக்கு
கால் நடைத்தீவனங்கள் வழங்குவதற்கான

## கேள்விப்பத்திரம்

மேற்படி விலங்கு வேளாண்மைத்துறைக்கு கிரமமான முறையில் கீழ்க்குறிப்பிடப்படும் கால்நடைத் தீவன வகைகளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை, பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு 18-01-1991 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப உறையின் இடதுபக்கமேல் மூலையில் ''கால் நடைத்தீவனங்கள் வழங்குதல்'' என்று எழுதப்படல் வேண்டும்.

1. தேங்காய்ப் பிண்ணாக்கு (தரம் I)
2. எள்ளுப் பிண்ணாக்கு (தரம் I)
3. பச்சை அரிசித்தவிடு (தரம் I)
4. புழுங்கல் தவிடு (தரம் I)
5. உளுத்தம் குருணி.
6. உளுத்தம் கோது.

மேற்படி பொருள்களின் 50 கிலோவிற்கு கோரும் விலையையும், ஒரு மாதத்திற்கு வழங்கக் கூடிய அளவையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

இவற்றை கிளிநொச்சியில் உள்ள விவசாயபீடத்தில் வழங்குவதாயின் அதற்குரிய விலையையும் குறிப்பிடுக.

(B/ 1790) -பதிவாளர்

❋ திரு. நல்லையா
❋ திரு. கிருஷ்ணா
ஆகிய தரமான ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

(ஒவ்வொரு பிரிவிற்கும் மாதத்திற்கு 35 மணித்தியாலத்திற்குக் குறையாத வகுப்புக்கள்)

மேலதிக விபரங்களுக்கு:

## New Master Institute

B. M. C. Lane, JAFFNA.

(B/1783)

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கலை, வர்த்தகம்
## A/L 92

ஆரம்பம்: 06-01-1991
ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி

| | | |
|---|---|---|
| ❋ பொருளியல் | – | வரதராஜன் |
| ❋ அளவையியல் | – | S. S. மனோகரன் |
| ❋ வர்த்தகம் | – | பிரபல விரிவுரையாளர் |
| ❋ கணக்கியல் | – | மரியதாஸ் |
| ❋ தமிழ் | – | மீரா |
| ❋ இந்துநாகரிகம் | – | ஜோதீஸ்வரன் |

A/L 90, 91 வகுப்புகள் நடைபெறுகின்றன.

(B/1773)

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தகம்
Day Classes
A/L 90, 91

ஆரம்பம்: 02 - 01 - 1991
புதன்கிழமை காலை 8-15மணி

## பொருளியல் - வரதராஜன்
“இலங்கைப் பொருளாதாரம்”

ஆரம்பம்: 02. 01. 1991
புதன்கிழமை காலை 9-15 மணி

(B1773)

## சிந்தனைக்கு

திடங்கொண்டு வாழ்ந்திடுவோம், தேம்பல் வேண்டா;
தேம்புவதிற் பயனில்லை, தேம்பித் தேம்பி
இடருற்று மடிந்தவர்கள் கோடி கோடி
எதற்குமினி அஞ்சாதீர் புவியி லுள்ளீர்.
— சுப்பிரமணிய பாரதி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 31-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்.05

# இன்றுடன் முடிவுறும் 1990

இன்றுடன் 1990 ஆம் ஆண்டு நிறைவுறுகின்றது. இலங்கைத் தீவைப் பொறுத்து பெரும் போர் நிறைந்த ஆண்டாகவும், தமிழ் மக்களைப் பொறுத்து பல வெற்றிகளும் நெருக்கடிகளும் நிறைந்த ஆண்டாகவும் இந்த ஆண்டு அமைந்தது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவம் இந்த மண்ணை விட்டு வெளியேறும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. 1987 இல் இருந்து உருவாகியிருந்த அரசியல் சூழ்நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இந்திய இராணுவத்தினராலும், அவர்களுடன் இணைந்து நின்ற தமிழ்க் குழுக்களாலும் நெருக்கடிகளை அனுபவித்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

இந்த வருடத்தின் முதல் ஆறுமாத காலமும் ஓரளவு அமைதி நிலவியதென்றே கூறலாம். இந்தக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்தது. பேச்சுவார்த்தையில் இரு பகுதி முக்கியஸ்தர்களும் பங்கு பற்றினார்கள். ஆனால் பேச்சுவார்த்தை தொடர்ந்ததேவே ஒழிய சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தரப்பு கோரிக்கைகள் எதையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. எதையும் காலம் தாழ்த்துவதிலும், தட்டிக் கழிப்பதிலுமே அக்கறையாக இருந்தது.

அந்த நிலையில், ஜூன் மாதம் ஆரம்பமாகிய விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையிலான போர் கடந்த காலத்தில நடைபெற்ற சகல மோதல்களையும் விட பெரிய அளவில் தமிழ்ப் பிரதேசமெங்கும் பரவலாக நடைபெற்றது. இந்த ஆறுமாத காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பெரும் இழப்புகளைச் சந்தித்தனர். வடக்கிலும், கிழக்கிலும் பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன - கைப்பற்றப்பட்டன. இந்த வரிசையில் கொண்டச்சி, கொக்காவில, யாழ்.கோட்டை, மாங்குளம் என்பன அடங்கின. இதில் யாழ்.கோட்டை, மாங்குள இராணுவமுகாம்களின் வீழ்ச்சிகள் சிறிலங்கா அரசாங்கத்தை இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் நெருக்கடிக்குள்ளாக்கியதோடு சர்வதேச ரீதியிலும், உள்நாட்டிலும் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை பெரும் பொருளாதார நடவடிக்கைகளையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தின.

இராணுவ ரீதியாகப் பெறப்பட்ட வெற்றிகள் தமிழர் மத்தியில் போராட்டத்திற்கு உத்வேகத்தைக் கொடுத்ததோடு விடுதலைப் புலிகள் மீது மக்களுக்கிருந்த நம்பிக்கை மேலும் வலுவடைந்தது. அதேவேளை போரினால் தமிழ் மக்கள் பெரும் நெருக்கடிகளை அனுபவித்தனர். புலிகளுடன் போர் என்ற ரீதியில் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட போரில் கிழக்கில் மட்டும் 5000 க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இலட்சக்கணக்கானோர் தமது வீடுவாசல்களை இழந்து அகதிகளாகினர். தமிழின ஒழிப்பு நடவடிக்கையில் முஸ்லிம்களும் சிறிலங்கா அரசுடன் சேர்ந்து கொண்டனர்.

அதேவேளை இராணுவ ரீதியான வெற்றி சாத்தியமற்றதென்பதை உணர்ந்த சிறிலங்கா அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்களில் பொருளாதார தடைகளை விதித்தது.

# நினைவில் பதிந்த நிகழ்வுகள்

## சிறிலங்கா தமிழீழம் 1990

14 02 1990
சர்வகட்சி மாநாடு.
16 02 1990
விடுதலைப் புலிகள்-கருணாநிதி முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை.
19-02-1990
யாழ்ப்பாணத்தில் ''ஈழநாதம்'' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.
19-02-1990
தமிழகத்தில் ஈழக்குழு துப்பாக்கிப் பிரயோகம்.
22. 02 1990
தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பேச்சுவார்த்தை.
24 02 1990
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொலிட்பீரோ கூட்டம்.
25-2-1990
தமிழக தலைவர்களில் ஒருவரான ப. நெடுமாறன் தமிழீழ விஜயம்.
06-03-1990
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் முப்படை தளபதிகளின் சந்திப்பு கொழும்பில் நடந்தது.
13 03 1990
இந்திய இராணுவம் இறுதிக் கட்டமாக வடக்குக், கிழக்கில் இருந்து வெளியேறியது.
19-03-1990
அன்னை பூபதியின் எழுச்சி தினமாக பிரகடனம்.
29-03-1990
தலைவர் பிரபாகரன் யாழ் நகர் விஜயம்
1-04-1990
தலைவர் பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களை சந்திப்பு
13-04-1990
அமைச்சர் ஹமீத்துடன் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தை
21-04-1990
தலைவர் பிரபாகரனும் ஈரோஸ் இயக்க பொதுச் செயலாளர் பாலகுமாரனும் சந்திப்பு.
23-04-1990
தமிழக எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பாவின் தமிழீழ முதலாவது நிகழ்ச்சி
29-04-1990
விடுதலைப் புலிகளால் புதிய வாகன அனுமதிப் பத்திரம் அறிமுகமானது.
03. 05. 1990
ஜப்பான் பிரதமமந்திரி கைபூ சிறிலங்கா வருகை.
07. 05. 1990

11-07-1990
கொக்காவில் இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்ப்பு.
20-07-1990
துன்பப்படும் ஈழத்தமிழர்களுக்காக தமிழகத்தில் பூரண ஹர்த்தால்
21-07-1990
11 பொலிசாரை விடுதலைப் புலிகள் விடுதலை செய்தனர்
15-08-1990
ஈரோஸ் கலைக்கப்பட்டதாக உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகியது.
13-09-1990
யாழ். கோட்டை முகாம் அருகே விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.
26-09-1990
யாழ். கோட்டை தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டது.
22-11-1990
மாங்குள முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டது
17-12-1990
சீனப் பிரதமர் லீபெங் சிறிலங்காவிற்கு வருகை தந்தார்.
18 12 1990
திருமலை மாவட்ட சிறிலங்கா இராணுவத் தளபதி பிரிகேடியர் லக்ஷ்மன் விஜயரட்ணாவும், பொலிஸ் அத்தியட்சகர் ரிச்சாட் விஜயசேகராவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலக்கண்ணி வெடித் தாக்குதலால் மரணமுற்றனர்.
29 12 1990
தமிழீழ விடுதலைப் புலிகளால் போர் நிறுத்தப் பிரகடனம் முன்வைக்கப்பட்டது.

## உலகம் – 1990

11-02-1990
தென்னாபிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.
12-03-1990
சோவியத்யூனியனில் இருந்து பிரிந்ததாக லித்துவேனியக் குடியரசு அறிவிப்பு.
9-04-1990
நேபாளத்தில் பலகட்சி ஆட்சிமுறை அறிமுகம். மன்னராட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
2-06-1990
அணு ஆயுதக் குறைப்பு உடன்படிக்கை சோவியத்யூனியனாலும், அமெரிக்காவாலும் கைச்சாத்திடப்பட்டது.

28-07-1990
லைபீரியத் தலைநகர் கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டது.
2-08-1990
குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தது.
6-08-1990
பாகிஸ்தானிய பிரதமர் பெனாசிர் பூட்டோவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.
9-09-1990
ஜோர்ஜ்புஷ் - கொர்பசேவ் முதல்சுற்றுப் பேச்சுவார்த்தை (வளைகுடாப் பிரச்சினை குறித்து)
02. 10. 1990
கிழக்கு - மேற்கு ஜேர்மனி ஒன்றிணைக்கப்பட்டது.
10. 11. 1990
இந்தியப் பிரதமர் வி. பி. சிங் ராஜினாமா.
10. 11. 1990
இந்தியப் பிரதமராக சந்திரசேகர் பதவியேற்பு.
27. 11. 1990
ஜப்பானிய சக்கரவர்த்தியாக அகிஹிட்டோ பதவியேற்பு.
29. 11. 1990
ஈராக் மீது போர் தொடுக்க ஐ. நா மன்றம் அனுமதி வழங்கியது. ஜனவரி 15ஆம் திகதிக்குள் குவைத்தை விட்டு வெளியேற காலக்கெடு ஐ நா விதித்தது.
14. 12. 1990
பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் ராஜினாமாச் செய்தார்.
16. 12. 1990
யூகோஸ்லாவியாவில் முதல்தடவையாக பல கட்சித் தேர்தல் இடம் பெற்றது.
22 12 1990
போலந்தின் ஜனாதிபதியாக லேக்வலேன்சா பதவியேற்பு.
24 12. 1990
தென்னாபிரிக்க தலைவர் டி. கிளார்க்கிற்கும் தென் ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போவிற்கும் இடையில் முதலாவது பேச்சுவார்த்தை.
25. 12. 1990
சூரினாமில் இராணுவப் புரட்சியினால் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

# திருட்டுப் பொருள்களுடன் நீண்ட காலத் திருடர் கைது

பங்கு பற்றினார்கள். ஆனால் பேச்சுவார்த்தை தொடர்ந்தளவே ஒழிய சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தரப்பு கோரிக்கைகள் எதையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. எதையும் காலம் தாழ்த்துவதிலும், தட்டிக் கழிப்பதிலுமே அக்கறையாக இருந்தது.

இந்த நிலையில், ஜூன் மாதம் ஆரம்பமாகிய விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையிலான போர் கடந்த காலத்தில் நடைபெற்ற சகல மோதல்களையும் விட பெரிய அளவில் தமிழ்ப் பிரதேசமெங்கும் பரவலாக நடைபெற்றது. இந்த ஆறுமாத காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பெரும் இழப்புக்களைச் சந்தித்தனர். வடக்கிலும், கிழக்கிலும் பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன - கைப்பற்றப்பட்டன. இந்த வரிசையில் கொண்டச்சி, கொக்காவில, யாழ்.கோட்டை, மாங்குளம் என்பன அடங்கின. இதில் யாழ்.கோட்டை, மாங்குள இராணுவ முகாம்களின் வீழ்ச்சிகள் சிறிலங்கா அரசாங்கத்தை இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் நெருக்கடிக்கு உள்ளாக்கியதோடு சர்வதேச ரீதியிலும், உள்நாட்டிலும் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை பெரும் பொருளாதார நடவடிக்கைகளையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தின.

இராணுவ ரீதியாகப் பெறப்பட்ட வெற்றிகள் தமிழர் மத்தியில் போராட்டத்திற்கு உத்வேகத்தைக் கொடுத்ததோடு விடுதலைப் புலிகள் மீது மக்களுக்கிருந்த நம்பிக்கை மேலும் வலுவடைந்தது. அதேவேளை போரினால் தமிழ் மக்கள் பெரும் நெருக்கடிகளை அனுபவித்தனர். புலிகளுடன் போர் என்ற ரீதியில் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட போரில் கிழக்கில் மட்டும் 5000க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இலட்சக் கணக்கானோர் தமது வீடுவாசல்களை இழந்து அகதிகளாகினர். தமிழின ஒழிப்பு நடவடிக்கையில் முஸ்லிம்களும் சிறிலங்கா ஆளாத அரசுடன் சேர்ந்து கொண்டனர்.

அதேவேளை இராணுவ ரீதியான வெற்றி சாத்தியமற்றதென்பதை உணர்ந்த சிறிலங்கா அரசாங்கம் தமிழ் பிரதேசங்களில் பொருளாதார தடைகளை விதித்தது. இதனால் ஏற்பட்ட விலைவாசி ஏற்றம் மக்களை நெருக்கடியில் தள்ளிய போதும் மக்கள் அவற்றை எதிர் கொண்டு சமாளித்தனர். அதேவேளை நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாதவர்கள் மண்ணைவிட்டு வெளியேறினர்.

இவ்வாறாக முடிவுறும் இவ்வாண்டு துயர்களின் மத்தியிலும் தமிழரின் உறுதியும், வெற்றியும் வெளிக்காட்டப்பட்ட ஆண்டாக விளங்கியது.

உலகினைப்பொறுத்து, இரண்டாம் உலகப்போரினால் பிரிந்த கிழக்கு - மேற்கு ஜேர்மனிகள் இணைக்கப்பட்டமையும், பேர்லின் சுவர் உடைக்கப்பட்டமையும் முக்கியமான சம்பவமாக அமைந்தன. அத்தோடு வடக்கு, தெற்கு ஜேர்மன் இணைப்புக்களும் இடம்பெற்றன. கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ ஆட்சியாளர்கள் கவிழ்க்கப்பட்டார்கள்.

இதேபோன்று ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாளர்களும், இராணுவரீதியாக ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றிய ஆட்சியாளர்களும் தமது பதவிகளை துறக்கவேண்டி ஏற்பட்டது. இதில் பிரிட்டன் பிரதமர் மாக்கிரட் தட்சரின் இராஜினாமா இந்தியப்பிரதமர் வி.பி. சிங் கவிழ்க்கப்பட்டமை, பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ அரசாங்கம் விலக்கப்பட்டமை, பங்களாதேஷ் இராணுவ ஆட்சியாளர் எர்சாட் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டமை கடைசியில் சிலதினங்களின் முன் நடந்தவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவையாவற்றிற்கும் மேலாக இந்த வருடத்தில் முக்கிய விடயமாக அமைந்தது ஈராக், குவைத்தை தன்னுடன் இணைத்தமையும் வளைகுடாவில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலுமாகும். இது அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் ஒரு பெரும்போருக்காக இந்த வருட இறுதியில் நிகழ்ந்த பெரும் முஸ்தீபிற்கு உள்ளாகியுள்ளது. எண்பதுகளில் உலக வல்லரசுகளிடம் இருந்த கெடுபிடி யுத்தமுறை முடிவிற்கு வந்ததினால் ஏற்பட்டுள்ள இந்த நிகழ்வானது தொண்ணூறுகளில் அமெரிக்காவினதும், மேற்குலகத்தினதும் புதிய போக்குகளை வெளிப்படுத்துவதாக அமையும்.

இந்திய இராணுவம் இறுதிக் கட்டமாக வடக்குக், கிழக்கில் இருந்து வெளியேறியது.

19-03-1990
அன்னை பூபதியின் எழுச்சி தினமாக பிரகடனம்.

29-03-1990
தலைவர் பிரபாகரன் யாழ் நகர் விஜயம்

1-04-1990
தலைவர் பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களை சந்திப்பு

13-04-1990
அமைச்சர் ஹமீத்துடன் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தை

21-04-1990
தலைவர் பிரபாகரனும் ஈரோஸ் இயக்க பொதுச் செயலாளர் பாலகுமாரனும் சந்திப்பு.

23-04-1990
தமிழக எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பாவின் தமிழீழ முதலாவது நிகழ்ச்சி

29-04-1990
விடுதலைப் புலிகளால் புதிய வாகன அனுமதிப் பத்திரம் அறிமுகமானது.

03. 05. 1990
ஜப்பான் பிரதமமந்திரி கைபூ சிறிலங்கா வருகை.

07. 05. 1990
மட்டக்களப்பு மாவட்ட எம்.பி சாம் தம்பிமுத்து சுட்டுக் கொலை.

25-05-1990
மலையக மக்கள் நாடு கடத்தப்படுவதை எதிர்த்து தமிழீழம் எங்கும் பூரண ஹர்த்தால் நடத்தப்பட்டது.

27-05-1990
விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் முதலாவது மகளிர் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

11. 06. 1990
வாழைச் சேனை பொத்துவில் பொலிஸ் நிலையங்கள் புலிகளின் வசம் (போர் ஆரம்பம்).

18. 06. 1990
கோட்டை முற்றுகை ஆரம்பம்.

20-06-1990
பத்மநாபா, யாழ்.மாவட்ட எம்.பி யோகசங்கரி உட்பட ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினர் கொலை.

21-06-1990
கொண்டச்சி இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்ப்பு.

07-07-1990
மாகாண சபை கலைப்பு

10-07-1990
வடமராட்சிக் கடலில் போர்க் கப்பல் தகர்க்கப்பட்டது.

அத்தியட்சகர் மச்சாட் விஜயசேகராவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலக்கண்ணி வெடித் தாக்குதலால் மரணமுற்றனர்.

29.12.1990
தமிழீழ விடுதலைப் புலிகளால் போர் நிறுத்தப் பிரகடனம் முன்வைக்கப்பட்டது.

## உலகம் – 1990

11-02-1990
தென்னாபிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.

12-03-1990
சோவியத்யூனியனில் இருந்து பிரிந்ததாக லித்துவேனியக் குடியரசு அறிவிப்பு.

9-04-1990
நேபாளத்தில் பலகட்சி ஆட்சிமுறை அறிமுகம். மன்னராட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

2-06-1990
அணு ஆயுதக் குறைப்பு உடன்படிக்கை சோவியத்யூனியனாலும், அமெரிக்காவாலும் கைச்சாத்திடப்பட்டது.

வழங்கியது. ஜனவரி 15ஆம் திகதிக்குள் குவைத்தை விட்டு வெளியேற காலக்கெடு ஐ.நா விதித்தது.

14. 12. 1990
பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் ராஜினாமாச் செய்தார்.

16. 12. 1990
யூகோஸ்லாவியாவில் முதல்தடவையாக பல கட்சித் தேர்தல் இடம் பெற்றது.

22. 12. 1990
போலந்தின் ஜனாதிபதியாக லேக்வலேன்சா பதவியேற்பு.

24. 12. 1990
தென்னாபிரிக்க தலைவர் டி. கிளார்க்கிற்கும் தென் ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போவிற்கும் இடையில் முதலாவது பேச்சுவார்த்தை.

25. 12. 1990
சூரினாமில் இராணுவப் புரட்சியினால் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

# திருட்டுப் பொருள்களுடன் நீண்ட காலத் திருடர் கைது

(நமது நிருபர்)

திருடுவதையே நீண்ட காலமாகத் தொழிலாகக் கொண்டிருந்த இருவர் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் விடுதலைப் புலிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாயில் நேற்று முன்தினம் அதிகாலை இச் சம்பவம் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை உடையாமணல் என்னுமிடத்தைச் சேர்ந்த மா. பழனிவேல், செ. சந்திரசேகரம் (குட்டி) ஆகிய இருவருமே திருட்டுப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டவர்களாவர்.

அல்வாய் வடக்குப் பகுதியில் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கமரா, 4 கைக் கடிகாரங்கள், ஒரு சைக்கிள், 1 குடை, டோர்ச்லைட், 607 ரூபா ரொக்கப் பணம் கஞ்சாக் கட்டு, வீடு உடைக்கும் இரும்புச் சட்டம் ஆகியனவற்றை இந்த இருவரும் கொண்டு செல்லும் பொழுது அல்வாய் வடக்கு விழிப்புக் குழுவினரிடம் அகப்பட்டுக் கொண்டனர். பின்னர் இருவரும் அல்வாய் பிரதேசப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (செ. த. மை)

# பகிரங்க தொழில் திறன் பயிற்சித் திட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு பகிரங்க தொழில் திறன் பயிற்சித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி தற்போது முறைசாராக் கல்வி பாடத்திட்டத்தில் உள்ள சகல பயிற்சி நெறிகளிலும் விசேட ஒருநாள் பயிற்சித் திட்டம் ஒன்றை விரைவில் நடைமுறைப் படுத்த இருப்பதாக முறைசாராக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இப் பயிற்சித் திட்டத்தில் வயது வேறுபாடு இன்றி எவரும் கலந்து கொள்ளலாம் என்றும் குறிப்பிட்ட ஒரு பாட நெறி ஒரு நாளில் முழுமையாக பூர்த்தியாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# அகாலிதளத் தலைவரின் மகஜரை பகிரங்கப்படுத்தல் வேண்டும்

## சந்திரசேகரிடம் காங்கிரஸ் கோரிக்கை

(புதுடில்லி)

அகாலிதளத்தலைவர் திரு. சிம்ரஞ்சித் சிங் மான் பிரதமர் திரு. சந்திரசேகரிடம் கொடுத்த மகஜரின் விபரங்கள் பகிரங்கமாக்கப்படல் வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது. திரு. மான் எழுப்பியிருக்கும் கோரிக்கைகள் குறித்து மிகுந்த ஐயப்பாடுகள் தோன்றியிருப்பதாகக் காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

சர்வதேச அமைதி, பாதுகாப்புப் பற்றிய அரசியல் சாசனத்தின் 51ஆவது பிரிவைப் பற்றி பேச்சுவார்த்தை எதுவும் நடத்தப்படல் ஆகாது என்று காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் திரு எம்.ஜே. அக்பர் நேற்றுப் புதுடில்லியில் தெரிவித்துள்ளார். அத்தகைய ஒரு கோரிக்கைக்கு அரசு என்ன பதில் கூறப்போகிறது என்பதை அறிந்துகொள்ள நாடு முழுவதும் ஆவலாக இருப்பதாக காங்கிரஸ் கட்சி சார்பில் திரு எம். ஜே. அக்பர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# முனிசிப்பல் காப்பரேசனுக்கு கட்புலனற்றோர் வழிகாட்டல்

(பம்பாய்)

கட்புலனற்ற இளைஞர்களும், யுவதிகளும் சேர்ந்து பம்பாய் முனிசிப்பல் காப்பரேசனின் கண்களைத் திறந்துள்ளனர். பம்பாயில் கட்புலனற்ற பட்டதாரிகள், ஒன்றியத்தின் அங்கத்தினரான 45 ஆண்களும், பெண்களுமாகச் சேர்ந்து பம்பாய் நகர வீதியொன்றிலுள்ள குழிகளை நிரவ லொறி ஒன்றில் கிரவல் கற்களை ஏற்றி வந்து, அதனைப் பறித்து குழிகளை நிரப்பும் வேலையை ஆரம்பித்துள்ளனர். முதலில் பார்வையாளராக நின்ற பாதசாரிகளும் பங்காளிகளாக மாறிக் கட்புலனற்றோருக்கு உதவியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது: மதன் பிரசாத் என்ற கட்புலனற்ற ஒருவர் தமது வெள்ளைப் பிரம்புடன் நடந்து தமது பம்பாய் புகையிரத நிலையத்திற்கு அண்மையாக வீதியோரமாக உள்ள நடைபாதையில் நடந்துள்ளார். ஓரிடத்தில் பாதுகாப்பு மதில் உடைந்திருந்தது.

நடைபாதை என்று நினைத்து அவர் வீதியில் காலை வைத்தார். குழியில் தடக்கி வீதியில் விழுந்தார். பின்னால் வந்த ராக்ஸி அவருக்கு யமனாக மாறியது. இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகத்தான் கட்புலனற்றோர் இந்த 'சிரமதானத்தில்' ஈடுபட்டனர்.

# ஒரிஸாவில் இருந்து வந்தோரே கைது செய்யப்பட்டுள்ளனர்

– ஜெயலலிதா

ஒரிஸா முகாமில் இருந்து தமிழகத்திற்கு வந்தவர்களை மட்டுமே தமிழக அரசாங்கம் கைது செய்திருக்கிறது என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்று முன் தினம் புதுடில்லியில் பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்து தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு நிலைமைகள் குறித்து மகஜர் ஒன்றை சமர்ப்பித்த பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் இதனை அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமைகள் சீர்கெட்டிருப்பதாகவும், தி.மு.க. அரசாங்கத்தைக் கலைத்து புதிய ஆட்சி நிலவ வழிவகை செய்யவேண்டும் என பிரதமரை அவர் கேட்டுக்கொண்டார்.

## போராட்டவரலாறு ஸ்லைட்டில்

விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாறும், மலையகமக்களின் சோக வரலாறும்பற்றிய ஸ்லைட்காட்சி கடந்த வெள்ளியன்று மானிப்பாயில் காண்பிக்கப்பட்டது. இதற்கான ஒழுங்குகள் அனைத்தும் மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் 'சங்கர்' தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. பல ஆயிரக்கணக்கான மக்கள் இதனைப் பார்த்துச் சென்றனர்.

### யாழ்மாவட்டத்தில்

தொடர்ந்தும் மருந்து மற்றும் உணவுப் பொருள்களுக்கு பற்றாக்குறை நிலவுமாயின் கால்நடைகள் அழிவதைத் தடுக்க முடியாமல் போகும் என கால்நடை வைத்திய உதவிப்பணிப்பாளர் தெரிவித்தார். (க)

### வெண்கட்டி

ளமாக கிடைக்கும் கண்ணாம்பை பிரதான மூலப் பொருளாகவும் சிறிதளவு பரிசுச்சாந்தையும் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தயாரித்த பல் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான வெண்கட்டி [illegible]

### கலை கலாசாரம்

மண்'' போன்ற பாடல்களைத் தாமாகவே உச்சரிக்கும் நிலைக்குச் சென்றுள்ளார்கள் எமது மக்கள். இவ்வாறு நேற்று மலை நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற்ற இந்த மண் எங்களின் சொந்த மண் புஷ்பநாதனின் இசைநிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுபேசிய யாழ். மாவட்டபிரசாரப்பொறுப்பாளர் ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு பாடுமீன் கலைமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சியில் பேசிய நிதர்சனம் பொறுப்பாளர் பரதன் அவர்கள் உரையாற்றுகையில் இந்திய இராணுவத்தினருடனான போர் நடைபெற்ற காலத்தில் விடுதலை கீதங்கள் பலவற்றை ஒலிப்பதிவு செய்வதற்காக இந்தியாவிலுள்ள கலைஞர்கள் பலரை நாம் தொடர்பு கொண்ட போது அவர்களில் பலர் [illegible]

### 30 கலைஞர்கள்

பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் இடம்பெறுகிறது. குடாநாட்டெங்கிலுமிருந்து 300க்கும் அதிகமான எழுத்தாளர்களும், கலைஞர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

தமிழீழத்தல் கலைஞர்களின் எதிர் காலத் திட்டம் பற்றியும், போராட்டத்துடன் இணைந்து பங்களிப்பு வழங்குவது பற்றியும் கலந்துரையாடலின் போது ஆலோசிக்கப்பட்டது. (85)

### கடுத்துவக்கு

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் புத்தூர்க்குடியிருப்பைச் சேர்ந்தவரான முருகேசு (வயது 41) என்பவர் காட்டுக்குச் சென்றார். காட் [illegible]

## ஈராக் அமெரிக்காவிற்கு எச்சரிக்கை

# அமெரிக்க கேந்திர நிலையங்கள் தாக்குதலுக்கு உள்ளாகும்

(பாக்தாத்)

வளைகுடா யுத்தம் ஏற்படுமாயின் உலகில் எந்தப் பகுதியிலாயினும் அமெரிக்கக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்கள் இருக்குமாயின் அவை மீது இடைவிடாத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று ஈராக் அறிவித்துள்ளது. இதேவேளை ஐக்கிய நாடுகள் சபை ஜனவரி 15ஆம் திகதி காலக்கெடுவின்படி ஈராக் படைகள் குவைத்தைவிட்டு வெளியேறாது என்றும், ஈராக் தெரிவித்துள்ளது இது இப்படி இருக்க, காலக்கெடுவின்படி ஈராக் படைகள் குவைத்தை விட்டு வெளியேறும் என்று அமெரிக்க ஜனாதிபதி அபிப்பிராயம் தெரிவித்தார்.

யுத்தம் ஏற்படும் பட்சத்தில் நெருப்பைப் பற்றவைக்கும் நோக்கத்துடன் குவைத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் கால்வாய்களை வெட்டி எண்ணெய்க் குழாய்களை ஈராக் பொருத்தியிருப்பதாக எண்ணெய் வள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ராஜதந்திரிகளின் குடும்பங்கள்

# பாக்தாத்திலிருந்து சொந்த நாடு திரும்புகின்றார்கள்

வளைகுடாவில்போர் ஏற்படக்கூடிய அபாயத்தைக் கருதி பாக்தாத்தில் உள்ள ராஜதந்திரிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர். ஈராக்கிலும், குவைத்திலும் உள்ள இந்தியர்களின் குடும்பங்களை சேர்ந்த பெண்களையும், குழந்தைகளையும் திருப்பியனுப்புமாறு இந்தியா கோரியுள்ளது பஹ்ரெயினிலும், கட்டாரிலும் உள்ள தூதரகங்களைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களை நாடு திருப்புமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதுடன் ஏனையோரையும் அபாயம் ஏற்படக்கூடிய பகுதிகளிலிருந்து விலகிக்கொள்ளுமாறு இந்தியா கேட்டுள்ளது.

# வளைகுடாவிலிருந்து திரும்ப இலங்கையருக்கு விருப்பமில்லை

வளைகுடா நாடுகளில் தொழில்பார்க்கும் இலங்கையர் பலர் நாடு திரும்ப விரும்புகிறார்களில்லை இத்தகவலை அமைச்சர் ஜி எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார். வளைகுடா நெருக்கடி காரணமாக வளைகுடா நாடுகளில் தொழில்பார்க்கும் இலங்கையருக்கு நாடு திரும்பும் படியாக அமைச்சர் மத்திய கிழக்கில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் ஊடாக வேண்டுகோளுக்கு மத்திய கிழக்கில் உள்ள இலங்கையர் செவிசாய்க்கவில்லையாம். குவைத்தில் வேலைபார்த்த இலங்கையர் மட்டும் நாடு திரும்பியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.க. பாராளு. உறுப்பினர் காளிமுத்து தி.மு.கவில் இணைவு

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர் காளிமுத்து திராவிட முன்னேற்றக்கழகத்தில் சேர்ந்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் இதனைக் காளிமுத்து அறிவித்தார். தமிழ்நாட்டில் ஜனநாயகமுறையில் அமைந்த தி.மு.க. அரசாங்கத்தைக் கவிழ்க்க அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே தாம் தி.மு.கவில் சேர்ந்ததாகத் தெரிவித்தார்.

இவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்தின் போது தமிழக அமைச்சராகவும் இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

### இறைச்சிக்கடை

கடை வைத்திருக்கும் திரு. க. தங்கராசா என்பவரே இவ்வாறு பணத்தைப் பறிகொடுத்தவராவார். இவர் தமது இறைச்சி வியாபாரத்தை முடித்துக்கொண்டு நெல்லியடியில் உள்ள தமது வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது முள்ளிவளைப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட கொள்ளையர்களால் வழிமறிக்கப்பட்டு குண்டாந் [illegible]

